# கிழக்கில் உள்ள தமிழ் அகதிகளுக்கு நிவாரணம்
# கைக்கெட்டியும் வாய்க்கெட்டவில்லை!

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-00

# முரசொலி

முரசு 04 ஒலி 284 சனி 24-11-1990 (கார்த்திகை 08) ஐ அவ்வல் 06

## சிலருக்கு 1-ம் கட்டமே இல்லை

கிழக்கில் உள்ள தமிழ் அகதிகளுக்கு உணவுப்பொருள்கள் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டுள்ள போதும் அவை அவர்களைச் சென்றடைவதில் பல முட்டுக்கட்டைகள் இருப்பதாகத்தெரியவருகிறது. நிவாரண விநியோகம் ஜூன் 28 ஆம் திகதி ஆரம்பமானது. இதுவரை 17 கட்டங்களில் நிவாரணம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் பாதிக்கப்பட்டவர்களில் 50 வீதமானோர் 3 கட்டங்களுக்கான நிவாரணத்தையே பெற்றுள்ளனர். வாழைச்சேனை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சில பகுதிகளுக்கு முதலாம் கட்ட நிவாரணம் கூட கிடைக்கவில்லை என்று புகார் செய்யப்பட்டுள்ளது. சில உதவி அரச அதிபர் அலுவலகங்களில் கிராமசேவகர்கள் அனுப்பிய நிவாரணப் பட்டியல்கள் தேங்கிக்கிடப்பதாகவும் தெரிகிறது. (66)

### கார்கள் நொருக்கப்பட்டன; ஐவருக்குக் கத்திக்குத்து

# கொட்டாஞ்சேனை இந்து ஆலயம் முஸ்லிம் கும்பலால் தாக்கப்பட்டது!

## இந்திய இந்து முஸ்லிம் கலவர எதிரொலி என அரசு சார்பில் நியாயப்படுத்தல்

கொழும்பில் கொட்டாஞ்சேனைப்பகுதியில் உள்ள இந்து ஆலயம் ஒன்று நேற்று முஸ்லிம் காடையர்களால் தாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் கொட்டாஞ்சேனைப் பள்ளிவாசலில் தொழுகையை முடித்துக்கொண்டு வெளியேறிய முஸ்லிம் கும்பலொன்று நேராக மேற்படி இந்து ஆலயத்திற்குள் நுழைந்து தமது தாக்குதலை ஆரம்பித்தன.

தாக்குதல் நடைபெற்ற சமயம் இவ்வாலயத்தில் பூஜை நடைபெற்றுக்கொண்டிருந்தது. தாக்குதலுக்கு அஞ்சி ஆலயத்தில் நின்ற பக்தர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர்.

இதனைத் தொடர்ந்து ஆலயத்தைச் சேதமாக்கிய மேற்படி கும்பல் ஆலயத்திற்குத் தீ வைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

—4 ஆம் பக்கம் பார்க்க

## மாங்குளம் முகாம் மீது தாக்குதல் காவலரண்கள் புலிகள் வசம்

### மோதல்கள் தொடர்கின்றன

மாங்குளம் ராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் கடும் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர்.

ஆரம்பத்தில் கடும் ஷெல் தாக்குதலை புலிகள், முகாம் மீது ஆரம்பித்தனர். தொடர்ந்து முகாம் மீது தாக்குதலை நடாத்தியவாறு முன்னேறிய விடுதலைப்புலிகள் முகாமின் அனைத்து காவலரண்களையும் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மோதல்கள் தற்போது முகாம் பகுதியில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. முகாமில் உள்ள ராணுவத்தினர் பதுங்கு குழிகளில் இருந்தவாறு தாக்குதல் நடாத்துவதாக தெரியவருகிறது. மோதல்களில் பத்துப்புலிப் போராளிகள் வீரமரணமடைந்தனர்.

மோதல்கள் தொடர்ந்து நடைபெற்றுவருவதால் ராணுவத்தினரின் சேதவிபரங்

—4 ஆம் பக்கம் பார்க்க

## 60 மாவீரர்களின் பெற்றோருக்கு தெல்லிப்பழையில் கௌரவம்

மாவீரர் தினத்தை முன்னிட்டு நேற்றுத்தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம் தனது எல்லைப்பரப்பினுள் உள்ள சுமார் 60 மாவீரர்களின் குடும்பத்தினரை அழைத்துக்கௌரவித்தது.

மாவீரர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தி அவர்கள் நினைவாக மதிய போசனமும் அளித்தது. தற்போதைய காலகட்டத்தை உணர்ந்து இவர்கள் ஒவ்வொருவருக்கும் பொருள் உதவியையும் இச்சங்கம் செய்துள்ளது.

இந்நிகழ்ச்சிக்கு அழைத்தும் வரமுடியாத மாவீரர் குடும்பத்தவரையும், தவறுதலாக அழைக்கப்படாதுள்ள குடும்பத்தவரையும் தன்னுடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கத்தலைவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை 25மைல் சைக்கிளோட்டப் போட்டியும், 5மைல் மரதன் ஓட்டப்போட்

—4 ஆம் பக்கம் பார்க்க

## யாழ் பல்கலைக்கழக மாணவர் 500பேர் வேறு பல்கலைக்கழகங்களில் பயில விண்ணப்பம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் வெளிமாவட்டப் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலுவதற்கு அனுமதிக்கப்படுவர் என்ற அரசின் அறிவிப்பையடுத்து சுமார் 500 மாணவர்கள் இதற்கு விண்ணப்பித்துள்ளனர்.

யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த 400 மாணவர்கள் கொழும்பு, கண்டி ஆகிய பல்கலைக் கழகங்களில் அனுமதி கேட்டு விண்ணப்பித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் பல்கலைக் கழக பரீட்சைகளும், பெறுபேறுகளும் பெறுமதியற்றதாக இருப்பதாக இம் மாணவர்

—4 ஆம் பக்கம் பார்க்க

### யாழ் ஆஸ்பத்திரியில்

## நோயாளிகளை அனுமதிக்க புதிய நடைமுறை அமுல்

யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளிகளை ஆஸ்பத்திரி வீதியிலேயே வைத்து இறக்கி, ஏற்றும் புதிய நடைமுறையை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுளளது.

இந்த ஏற்பாட்டின்படி நோயாளிகளை வீதியில் வைத்தே இறக்கி சக்கரவண்டி ஸ்ரெக்சர் போன்றவற்றில் ஏற்றி உள்ளே கொண்டு செல்கின்றனர். இவ்வாறு கொண்டு செல்லும் வழி அழுத்தமாக இல்லாததால்

—4 ஆம் பக்கம் பார்க்க

### இம்மாத முடிவிற்குள்

## சேத விபரங்களைப் பதிய யாழ்அரச அதிபர் பணிப்பு

கடந்த யூன் மாதத்தின் பின்பு யாழ் மாவட்டத்தில்ஏற்பட்ட இராணுவத்தாக்குதல் சேதங்கள், நஷ்டங்களின் விபரங்களை இம்மாத முடிவிற்குள் சமர்ப்பிக்க வேண்டுமென்று சகல உதவி அரச அதிபர்களையும், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் பணித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளின் கிராமசேவை அலுவலகர்கள் மூலம் உதவி அரச அதிபர்கள் இவ்விபரங்களைத் திரட்டி வருகின்றனர்.

—4 ஆம் பக்கம் பார்க்க

## ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கம் வட கிழக்குப் பகுதிக்கு நிவாரணம்

ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த செஞ்சிலுவைச் சங்கம் வடக்கு, கிழக்குப் பகுதியில் நடைபெற்றுவரும் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கத்துடன், அங்கு வாழும் ஈழத் தமிழர்களும் சேர்ந்து இந் நிவாரணத் திட்டத்திற்கு உதவி செய்ய இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

—4 ஆம் பக்கம் பார்க்க

## பலாலியிலிருந்து ஷெல் தாக்கு

பலாலி முகாமிலிருந்து நேற்று மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அவற்றில் சில கோண்டாவில் பகுதியில் விழுந்து வெடித்தன. இதனால் கோகிலா (14), த. மதன் (12) ஆகியோர் காயமடைந்தனர்.

மாலை 6 30 மணிக்கு கரவெட்டி நவக்கிரி, புத்தூர், கொட்டகைப்புலம்பகுதிகளிலும் விழுந்து வெடித்தன

(32 ப 10)

## 15 கூட்டுறவு ஊழியர்களுக்கு நாளை தங்கப்பதக்கப் பரிசு

நாளை ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை ப நோ கூ. சங்கத்தில் நடைபெறும் மாவீரர் நினைவு தின நிகழ்ச்சியில் இச் சங்கத்தில் 25 வருடங்களுக்கு மேல் சேவை செய்த ஊழியர்களுக்கு தங்கப் பதக்கம் அளித்து கௌரவிக்கப்படவுள்ளது. இச் சங்

—4 ஆம் பக்கம் பார்க்க

மாவீரர் வாரம்: போர்க்கால சிந்தனை-4

## வீர சாகசம்

'கலிபரை வான் ஹெலி மேற் போக்கி வரும் சன்னம்
விலக்கி உதிர்க்கும் சிரிப்பு'

— போர்க்குறள்

''கலிபர்'' என்ற நவீன சுடு படைக்கலம் ஒன்றினால், வானத்திலே வரும் ஹெலி (உலங்கு வானூர்தி) ஒன்று தன்னைத் தாக்க வரும்போது வீரன் ஒருவன் அதன் மீது குறிவைத்துத் தாக்குகின்றான். அப்போது ஹெலியில் இருந்து வரும் சன்னம் ஒன்று தன்னைத் தாக்கவருவதைக் கண்டு தனது போர்ச் சாகசத்தினால் அதனை விலக்கி நின்று ஹெலியைப் பார்த்து ஏளனச் சிரிப்பொன்று உதிர்க்கின்றான்.

இக்காட்சிகளை அடிக்கடி இங்கு போர்க்களத்திலே மக்கள் கண்டு வீரர்களின் ''போரென்ன வீங்கு பொருப்பன்ன திண் தோள்களைப்'' பார்த்துப் பூரிப் பார்கள்.

இவ்வீரர்களுக்கு அஞ்சி உலங்கு வானூர்திகளும், குண்டுவீச்சு விமானங்களும் கீழே வராது, 3000 அடி உயரத்திலேயே வட்டமிடும்.

''கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்''

— திருக்குறள்

கையில் உள்ள வேலை யானை மீது எறிந்து விட்டு, வேறு வேலைத்தேடி வருபவன், தன் உடம்பில் தைத்துள்ள வேலைப் பறித்து மகிழ்வான் என்பது திருக்குறட் கருத்து.

இதனோடு நோக்கும் போது யுத்த சன்னத்தனாக நிற்கும் நம் வீரனின் வீரம்படம் போடப்பட்டதன்றோ!

— முருகனடியான்

## எழுச்சி விழா

மூறைசாராக் கல்விப் பிரிவு அவசர முதலுதவிச் சேவை நிலையங்களினால் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடாத்தப்படவிருக்கும் எழுச்சி விழாவில் தங்கள் நிலையத்தின் - பாடசாலையின் சார்பில் சகலரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (16)

## அவுஸ்திரேலியாவில் பாரதி விழா

அவுஸ்திரேலிய தமிழர் ஒன்றியம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 15-ம் திகதி சனிக்கிழமை 'பாரதிவிழா'வை,சிறப்பாகக் கொண்டாடவுள்ளது.

மெல்போர்ன் பல்கலைக்கழக உயர்தரக்கல்லூரி பார்க்கில் பாடல், மனன, நாவன்மைப் போட்டிகளும், உரையரங்கம், இசையரங்கம், விவாத அரங்கம் போன்ற பல்சுவை அம்சங்களும் இதை ஒட்டி நடைபெறவுள்ளன.

சென்னை தமிழ் ஆய்வு நிறுவனம் எச்சரிக்கை

# மேற்குலகதமிழ்க்குழந்தைகள்

## 'ஆங்கிலோ-தமிழ்' சமுதாயமாக மாறும் ஆபத்து

மேற்கத்திய நாடுகளில் உள்ள பல தமிழ்க் குழந்தைகள் தமிழ் வாசனையே அற்ற நிலையில் வளர்க்கப்படுவதாக சென்னையிலுள்ள தமிழ் ஆய்வு நிறுவனமொன்றின் அறிக்கையில் தெரிவிககப்பட்டுள்ளது.

குறிப்பாக கனடா, பிரிட்டன், அமெரிக்கா, டென்மார்க், நோர்வே, மற்றும் அவுஸ்திரேலியா நாடுகளில் உள்ள தமிழ்க் குழந்தைகளே இந்த நிலைக்கு உள்ளாகி வருவதாக இந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தக் குழந்தைகளுக்கு ஆங்கில மொழியிலேயே கல்விகற்பிக்கப்படுவதாகவும், தமது நண்பர்களுடனும் குடும்ப அங்கத்தவர்களுடனும் இவர்கள் ஆங்கிலத்திலேயே சம்பாஷணையை மேற்கொள்வதாகவும், இவர்களின் வளர்ப்பும் ஆங்கில கலாசாரத்தைப் பின்பற்றியதாகவே உள்ளதாகவும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் எதிர் காலத்தில் தமிழைப் பேசவோ எழுதவோ வாசிக்கவோ தெரியாத ஒரு தமிழ்ச் சமுதாயம் உருவாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் இதனைத்தடுத்து நிறுத்த இப்போதே நடவடிக்கையெடுக்கப்படல் வேண்டுமெனவும் சென்னை தமிழ் ஆய்வு நிறுவனத்தின் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஆங்கிலோ-இந்திய சமூகம் உருவாகியுள்ளதுபோல் மேற்குலகிலும் ஒரு ஆங்கிலோ - தமிழ் சமுதாயம் உருவாகும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-1,16

## கடல் கடந்து புகழ் பரப்பும் புரட்சிக் கீதம்

விடுதலைப்புலிகளின் கலை,கலாசாரப்பேரவை ஆதரவில் வெளியிடப்பட்டுள்ள 'இந்த மண் எங்களின் சொந்தமண்' என்ற புரட்சி கீதம் தமிழகத்திலும் மற்றும் தமிழர் வாழும் பல நாடுகளிலும் பெரு வரவேற்பைப் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (16)

## சங்கானையில் மலிவுவிற்பனை

சங்கானை கால்நடை வைத்திய அதிகாரியின் சண்டிலிப்பாயிலுள்ள அலுவலகத்தில் மாங்கன்று, பலா, எலுமிச்சை, தோடை, மாதுளை போன்ற மரக்கன்றுகள் சகாய விலையில் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (13)

## மருந்துக் களஞ்சியம் இடமாற்றம்

யாழ் சுகாதாரத் திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியம் யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பழைய கட்டிடத்திற்கு மீண்டும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. கடந்த நான்கு மாத காலமாக இந்தக் களஞ்சியம் கோண்டாவிலுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தது. (13)


## சிறு விளம்பரம்

### சேவை

நல்லூரில் தரமான தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகளை அதிவிரைவாகப் பெறவும்,பாஸ்போட், அடையாள அட்டை புகைப்படங்கள் பிடிக்கவும் கறுப்பு வெள்ளைப் படங்களை 12''X10'' அளவிற்கு பெரிதாக்கவும் நாடவேண்டிய ஸ்தாபனம் சித்ராலயா, இல 351,கோவில் வீதி, (நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கு அண்மையில்) நல்லூர். 11110

### விற்பனைக்கு

நுளம்புத் தொல்லையிலிருந்து விடுதலை பெற இயற்கை வழி நீம் சுகாதாரதூபம். தனிப் பைக்கற் ரூபா 1/- மட்டுமே. ''மில்க்வைற்'' யாழ்ப்பாணம். 11133



மாவீரர் வாரம் 21-27.11.90 கூட்டுறவாளர்கள்

யாழ் மாவட்டக் கூட்டுறவாளர் நடாத்தும்

தமிழீழ மாவீரர் நாள்

# மாவீரர் கனவை நனவாக்குவோம்

மண்ணைக் காக்க மாவீரர்
மடிந்தார் களத்தில் மகிழ்வுடனே.
எண்ணம் எல்லாம் தமிழீழம்
இவரின் கனவை நனவாக்கும்
வண்ணம் கைகளில் ஆயுதங்கள்
வைத்திருக்கின்றோம் இவர் வழியில்.
கண்ணும் கருத்தும் ஒன்றாகக்
காண்போம் வெற்றி வாருங்கள்.

கூட்டுறவாளர்,
வலிகாமம் கோட்டம்.
24 11.1990

11123

## கவிஞரின் நாடகத்துக்கு நோர்வேயில் முதற் பரிசு

நோர்வே தமிழ்ச்சங்கம் நடத்திய நாடகப் போட்டியில் கவிஞர் சோ. பத்மநாதன் (சோ. ப.) எழுதிய ''வான் விளிம்பில் ஒரு நட்சத்திரம்'' என்ற நாடகம் முதற்பரிசு பெறுகிறது.

நோர்வே தமிழ்ச் சங்கம்
1990 ஆம் ஆண்டு நடத்திய

### நாடகப்போட்டியின் முடிவுகள்

1ஆம் பரிசு: கவிஞர் சோ. பத்மநாதன்-கோண்டாவில்
2ஆம் பரிசு: திரு. க. இரமணிதரன் - கொக்குவில்
3ஆம் பரிசு: திரு. திருமலை நவம் - திருகோணமலை

### ஆறுதல் பரிசுகள்

1. திரு. செ. குணரத்தினம் - மட்டக்களப்பு
2. திரு. பி. சக்திவேல் - கொழும்பு
3. செவ்வந்தி மகாலிங்கம் - பரந்தன்
4. திரு எம் எஸ்.செல்வசீலன் எட்வர்ட்ஸ்-மானிப்பாய்
5. திரு. எம். கே. திருவிக்கிரமன் - கொழும்பு
6. திருமதி லீலா ஜெயரட்ண - மொரட்டுவை
7. செல்வி கௌசல்யா சிவலிங்கம்-காங்கேசன்துறை
8. திரு. க. சண்முகபாலன் - கொழும்பு
9. திருமதி சி. சக்திவேல் - தியத்தலாவை
10. திரு. க. குமாரசுவாமி - கல்முனை

## இலங்கை அரசுடன் பேச்சு; சுக்ளா விரைவில் வருவார்

இலங்கை இனப்பிரச்சினை பற்றி இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்திய வெளியுறவு அமைச்சர் திரு வி. சி. சுக்ளா விரைவில் இலங்கை வரவுள்ளார்.

இத்தகவலை பிரதமர் திரு. சந்திரசேகர் மாலை தீவு தலைநகர் மாலேயில் வைத்து நேற்று முன்தினம் வெளியிட்டார்.

இத் தகவலை அங்கு இலங்கைப் பிரதமர் திரு ரி பி. வி ஜதுங்காவுடன் நடத்திய உரையாடலின் பின் அவர் வெளியிட்டார்.

''இலங்கையில் நடைபெறும் மோதல்கள் அந்நாட்டின் பிரச்சினைகள். இலங்கை அரசு இந்தியாவின் உதவியை நாடினால் உதவியளிக்கப்



படும்'' என்றும் திரு. சந்திரசேகர் கூறினார்.

திரு. சுக்ளாவின் இலங்கை விஜயத்துக்கான திகதி இன்னமும் குறிக்கப்படவில்லை.

### சுவிசைப் பின்பற்றி

## வங்கிக் கணக்குகளில் புதிய நடைமுறை

உலகப் பிரசித்தி பெற்ற சுவிஸ் நாட்டு வங்கிகள் போல இலங்கையிலும் பிற நாட்டவர்கள், பிற நாட்டு தனியார் ஸ்தாபனங்கள், வர்த்தக வங்கிகளுடன் கணக்குகளை வைத்திருப்பதற்கு வழி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

இதற்கு முன்னோடியாக இலங்கை மத்திய வங்கிக்கு அங்கீகாரம் வழங்குவதற்கு ஏதுவாக, வங்கிகளின் சட்டத்தில திருத்தம் செய்வதற்காக, பிரேரணை ஒன்று கடந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்விதம் வங்கிகளில் கணக்குகளை வைத்திருப்போர் பற்றிய விபரங்கள் யாவும் மிகவும் இரகசியமாக பாதுகாக்கப்படும். ஆனால் சர்வதேச சட்டங்களுக்கு அமைய, கிறிமினல், விமானக் கடத்தல், போதைவஸ்து கடத்தல் போன்ற குற்றங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களின் தாய் நாடுகள் புலனாய்வு மேற்கொள்ளும் பட்சத்தில் வங்கிக் கணக்குகள் பற்றிய விபரங்கள் வெளியிடப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (16)

### அரசு மீது சிறிமா சீற்றம்

## எதிரிகள் மீதான பழிவாங்கல் தொடர்ந்து நிகழ்கிறது

''அவசரகாலச் சட்டம் என்ற போர்வையில் எதிரிகளை ஒடுக்குதல், கடத்திச் செல்லுதல் ஆகிய சம்பவங்கள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன'' என்று எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் அரசு மீது குற்றம் சுமத்தினார்.

திரு. வாசுதேவ நாணயக்கார எம் பி. பேசுகையில் ''வட, கிழக்கில் நிகழும் அனாவசிய யுத்தத்தால் வறிய மக்கள் கஷ்டப்படுகிறார்கள்'' என்று சொன்னார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் நீடிப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### நேற்றுமுன்தினம் மாத்திரம்

# ஜிந்துப்பிட்டி தனியார் விடுதியில் 25 வடபகுதி இளைஞர் கைது

கொழும்பில் ஜிந்துப்பிட்டி செக்கடித்தெரு மற்றும் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டிப் பகுதிகளில் உள்ள தனியார் லொட்ஜ்களில் தங்கியிருக்கும் வடபகுதி இளைஞர்கள் மீதான கெடுபிடி நாளுக்கு நாள் வலுப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் மாத்திரம் ஜிந்துப்பிட்டிப் பகுதி லொட்ஜ் ஒன்றிலிருந்து 25 இளைஞாகள் தலையாட்டிகள் மூலம் கைதுசெய்யப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது.

பொலிஸ்ஜீப்பில் இத்தலையாட்டிகள் கூட்டிவரப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

இதனால் கொழும்பில் தங்கியுள்ள வடபகுதி இளைஞர்கள் மிகுந்த கிலேசத்துடன் காணப்படுவதாக நேற்றுமுன்தினம் யாழ் வந்து சேர்ந்த இளைஞர் ஒருவர் கூறினார்.

இது இவ்வாறு இருக்க, வவுனியா- பூந்தோட்டத்துக்கு அப்பால் செல்லும் இளைஞர்கள் இராணுவத்தால் துன்புறுத்தப்பட்டு வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (74)

## மாவீரர் நினைவாக...

மாவீரர் நினைவாக மிருசுவில் வடக்கில் 'மாவீரர் நூலகம்' அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் அன்றைய தினம் வடக்கு மிருசுவிலில் ஒரு வீதிக்கு இறந்த போராளி மாதவனின் பெயர் சூட்டப்பட்டது. இந்த வைபவம் சிற்றூரவைத் தலைவர் சி. குமாரசாமி தலைமையில் நடைபெற்றது. (ப -32)

★ ★

மாவீரர் தினத்தை முன்னிட்டு ஏழாலை லெனின் சனசமூக நிலையத்தினர் பல வருடங்களாக திருத்தப்படாதிருந்தமல்லாகம்-குரும்பசிட்டி வீதியை சிரமதானம் மூலம் செப்பனிட்டுள்ளனர். (16)

★ ★

மாவீரர் தினத்தையொட்டி வேலணை பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் கலை, கலாசார நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளது. வெற்றிபெற்றோருக்கு மாவீரர் தினத்தன்று பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (19)

★ ★

அரியாலை, கொழும்புத்துறை, பாஷையூர் ஆகிய இடங்களில் மாவீரர்தினத்தை முன்னிட்டு அலங்காரவளைவுகளும் பந்தல்களும் அமைக்கப்பட்டுள்ளன, அரியாலை கனகரட்ணம் வீதிச்சந்தியில்பலகைகளினால் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபி மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது. (17)

★ ★

யாழ் நகரத்தின் மேற்குப் பகுதியான கொட்டடிப்பிரதேசம் சுத்தம் செய்யப்பட்டுள்ளது. உள்ளூர் யுத்தத்தினால் இப்பகுதி சேதமடைந்து மக்கள் இடம்பெயர்ந்து சென்றிருந்தனர். மாவீரர் வாரத்தை முன்னிட்டு கொட்டடி சனசமூகநிலைய நிர்வாகிகள் சிவன்பண்ணை வீதி, சீனிவாசகம் வீதி, மாவடி வீதி, வயிரவ கோவில்வீதி, காதர் அபூபக்கர்வீதி, ஆகியவைகளில் குவிக்கப்பட்டிருந்த கட்டிட கழிவுப் பொருட்களை அகற்றி சுத்தம் செய்து வருகின்றனர். (72)

## புலவர் கீரன் காலமானார்

பிரபல பக்திச்சொற்பொழிவாளர்புலவர் கிரன் (வயது55) சென்னையில் நேற்று முன்தினம் திடீரென மயக்கமுற்று பின்காலமானார்.சிறிதுகாலம் ஆசிரியராகக் கடமையாற்றிய அவர் அமெரிக்கா,இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கும் பக்திச் சொற்பொழிவுகளுக்காகச் சென்று வந்துள்ளார்.

## 45-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| தோற்றம்: | | மறைவு: |
|---|---|---|
| 03 | | 11 |
| — | | — |
| 04 |  | 10 |
| — | | — |
| 1934 | | 1990 |

### அமரர் இராசையா பாலசிங்கம்
(Rtd. Navy Petty Officer)

எமக்கெல்லாம் நல்வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு என்றும் அகலாதிருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது தலைவன் மரணித்தவேளை புகழாரம் சூட்டி மன்னவன் போல் அலங்கரித்து பாடையுடன் சுடுகாடு வரை கால் வழி நடந்து இன்றுவரை எமக்கு ஆறுதல் பல கூறி இத்துயரில் எம்முடன் கலந்துவிட்ட உறவினர், சுற்றத்தார், நண்பர்கள் அத்தனை பேருக்கும் எம் நன்றிகளை நவில்கின்றோம்.

24 11 90 இன்று அதிகாலை 6.00மணியளவில் ஊறணி கடலில் அஸ்தி சேர்க்கப்படும்.

''கன்னிகா பவனம்''
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள்,
குடும்பத்தார்

11126

## இதய அஞ்சலி

### அமரர் வேலுப்பிள்ளை நடேசபிள்ளை

அமரர் திரு. வேலுப்பிள்ளை நடேசபிள்ளை (யாழ் மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி) அவர்களின் எதிர்பாராத மறைவு இக் கால கட்டத்தில் கூட்டுறவுத்துறைக்கு ஈடுகொடுக்க முடியாத இழப்பாகும். அன்னாருக்கு எமது இதய அஞ்சலியைச் செலுத்துவதோடு அவரது குடும்பத்தவர்கட்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்,
கொடிகாமம்.

11132

## மாவீரர் நினைவாக! இல்லங்களில் சுடர் ஏற்றுக

தமிழீழ மண்ணின் விடிவுக்காக களம்புகுந்து வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட மாவீரர்களை நினைவு கூரும் இவ் வாரத்தில், எதிர்வரும் 26ம் திகதி நள்ளிரவு 12 மணி 1 நிமிடத்துக்கு (27ம் திகதி அதிகாலை) தமிழீழத்திலுள்ள ஆலயங்கள், பாடசாலைகள், நிறுவனங்களிலுள்ள பாரிய மணிகளை இரண்டு நிமிடங்களுக்கு அசைத்து ஒலி எழுப்பும்; அந் நேரத்தில் அனைத்து மக்களையும் தத்தம் இடங்களில் எழுந்து நின்று மாவீரர்களின் நினைவாக இரண்டு நிமிடம் அஞ்சலி செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றோம். இந்த அஞ்சலி நிகழ்வு முடிந்ததும் 12 மணி 3 நிமிடத்துக்கு மாவீரர் சுடர் ஏற்றும் நிகழ்ச்சி ஆரம்பமாகும். மாவீரர்களின் நினைவாக இந் நேரத்தில் உங்கள் வீடுகளில் தீப்பந்தங்களால் அலங்கரித்து சுடரேற்றி நினைவு கூருமாறு கேட்டுக்கொள்கின்றோம். தமிழீழம் முழுவதும் மாவீரர் சுடர் இந் நேரத்தில் ஒளிபரப்பி எங்கள் ஒன்று பட்ட உணர்வை உலகுக்குக் காட்டுவதாக! (71)

## ஒயில் திருட முயன்றவர்களை பொதுமக்கள் பிடித்தனர்

நேற்று முன்தினமிரவு அளவெட்டி வடக்கு சனசமூக நிலையத்தின் முன்னால் உள்ள மின்மாற்றியில் ஒயில் திருட முயன்ற சிலர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இவர்கள் கைக்கிளில் இருபது லீற்றர் கொள்கலனுடன் வந்து திருட முயன்ற போதே பிடிபட்டனர்.

சத்தம் கேட்டதும் மூவர் ஓடிவிட இருவர் மட்டும் அகப்பட்டனர். (48)

## தங்கச்சங்கிலிகள் கொள்ளை விமானப்படை வீரர் கைது

கொழும்பு மாநகரின் சில பகுதிகளில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற தங்கச் சங்கிலிகள் கொள்ளை தொடர்பாக விமானப்படை வீரர் ஒருவர் வெள்ளவத்தைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்கா விமானப் படைத் தளத்தைச் சேர்ந்த இவருடன் வேறு நான்கு பேரும் கைதாகியுள்ளனர்.

இவர்களிடமிருந்து 4 லட்சம் ரூபா பெறுமதியான 33 தங்கச்சங்கிலிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (66)

## 4000 மரக்கன்றுகள் இலவசமாக விநியோகம்

இளவாலை முள்ளானை கலைவாணி சனசமூக நிலையத்தின் பொன்விழாவும் மாவீரர் தினவிழாவும் நேற்று நடைபெற்றது.

நிலையத் தலைவர் திரு.வ. செகராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் 4000 (நாலாயிரம்) மரக்கன்றுகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டன. யாழ் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சு. டிவகலால மற்றும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர்களும் இவ் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். (37,13,48)

### நோயாளிகளை...

நோயாளிகள், காயமடைந்தோர் மேலும் அதிக வலியுடன் வேதனைப்பட்டுக் கொண்டு போவதனையும் காணக் கூடியதாக இருக்கிறது. (71,74)

### 15 கூட்டுறவு ..

கத்தைச் சேர்ந்த 15 பேர் இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். அத்தோடு போர்க்காலத்திலே சேவை செய்த கூட்டுறவில் சிறந்த பணியாளர்களுக்கும் சங்கம் பரிசில் வழங்கி கௌரவிக்க இருக்கின்றது. (ப.10)

### யாழ்...

களின் தப்பான எண்ணமே இதற்குக் காரணம் எனப் பல்கலைக் கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் எந்தப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்றாலும் யாழ் பல்கலைக் கழகப் பரீட்சையிலேயே பங்கு பற்ற வேண்டும் என பல்கலைக் கழக மானிய ஆணைக் குழு அறிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (70)

## காலமானார்

### சண்முகம் ஞானப்பிரகாசம்

யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த இளைப்பாறிய சிரேஷ்ட கூட்டுறவு ஆணையாளர் திரு. சண்முகம் ஞானப்பிரகாசம் 23-11-90 காலை காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:

ச. பாலசுப்பிரமணியம் (சகோதரர்)

11134

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 23.11-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

# ஈழத் தமிழரின் அவல நிலையை உலகறியச்செய்ய வேண்டும்

ஸ்ரீ லங்கா அரசு திட்டமிட்ட பிரசாரத்தினால் இங்கு நடப்பவைகளை மூடி மறைக்கின்றது. இதனால் இங்கு நடப்பவை உலக நாடுகளுக்குத் தெரிய வருவதில்லை. எனவே கத்தோலிக்க திருச்சபை ஈழத் தமிழரின் பிரச்சினையில் மௌனம் சாதிக்காது.

இவ்வாறு ஆசிய நாடுகளின் ஆயர் மன்ற இறை இயல் ஆலோசகரும், புனித சவேரியார் குருமட அதிபருமான வண பிதா. எஸ். ஜே. இம்மனுவேல் அடிகள் செய்தியாளரிடம் கூறினார்.

ஈழத் தமிழர்களின் இன்றைய அவல நிலையை உலகறியச் செய்யவேண்டும். கத்தோலிக்க மதம் ஒரு உலகளாவிய மதமாக இருப்பதால் அதற்கு இப்பணியில் உதவுவது சுலபம் என்றும் அவர் சொன்னார்.

வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தமக்குள் பிரிவினை இல்லாது ஒன்று திரண்டு தம்மாலான ஈழத் தமிழரின் யதார்த்த நிலையை அங்கு தெளிவு படுத்தவேண்டும் விடுதலைப் போராட்டத்திற்கு எத்தனையோ விதத்தில் வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தங்கள் பங்களிப்பை இனியாவது உணர்ந்து செய்யவேண்டும் இவ்வாறு அவர் கூறினார். (16)

## 'தமிழருக்கென்று ஒரு தாயகம் வேண்டும்!'

''உலகில் உள்ள எட்டுக் கோடி தமிழர்களுக்கு ஒரு நாடு இல்லை எமக்கென்று ஒரு நாடு இருக்கவேண்டும் என்பதற்காகவேநாம் போராடுகின்றோம். இந்நிலையில் தமிழர்கள் இங்கிருந்து ஓடித் தப்பி வெளிநாடுகளில் கோடிகளில் வாழுகின்றனர் இந் நிலை மாறவேண்டும்''

இவ்வாறு யாழ் மாவட்ட பிரச்சார பொறுப்பாளர் திரு அஞ்சநேயர் நேற்று சாவகச்சேரியில் இடம்பெற்ற கூட்டுறவாளர் விழாவில் பேசுகையில் கூறினார்.

தென்மராட்சி கோட்டகூட்டுறவாளர்களின் மாவீரர் தின விழா சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நேற்று வெகு சிறப்பாக நிகழ்ந்தது.

### சாவகச்சேரியில் ஆஞ்சநேயர்

கோட்ட ரீதியாக நடைபெற்ற பேச்சு, குழுப்பாடல், நாடகப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களும் கூட்டுறவுத் துறையைச்சார்ந்தவர்களும் இவ்வைபவத்தில் உரையாற்றினார்கள். (66)

## இல.போராளிகளுக்கு இந்தியாவில் அனுமதி இல்லை

தமிழ்ப் போராளிகள் இந்தியாவைத் தளமாகப் பாவிக்க அனுமதிக்கப்படமாட்டார்கள் என இந்தியாவின் பிரதமர் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

### 60 மாவீரர்களின்...

டியும் கல்வியங்காடு செல்லக்கிளி அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இப்போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் ஆரம்பமாகும். இதில் பங்கு பற்ற விரும்புவோர் கல்வியங்காடு செல்லக்கிளி அமைப்புடன் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

முதல் பரிசாக தங்கப்பதக்கமும், இரண்டாம் பரிசாக வெள்ளிப்பதக்கமும், மூன்றாம் பரிசாக வெங்கலப் பதக்கமும் வழங்கப்படவுள்ளன.

மாவீரர் தினத்தை முன்னிட்டு குடாநாட்டின் பல பகுதிகளிலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் நுளம்புத் தொல்லை பெருகாதிருக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கிராமங்களிலுள்ள வீதிகள், மதகுகள், ஒழுங்கைகள், வெள்ளவாய்க்கால்கள். வீதிக் கரையோரங்கள் சுத்திகரிக்கப்பட்டு புனரமைக்கப்படுகின்றன.

பல வருடக்கணக்கில் திருத்தப்படாதிருந்த பல வீதிகள் தற்போது திருத்தப்படுவதும் புதுமெருகாக்கப்படுவதும் குறிப்பிடத்தக்க அச்சமாகும்.

அச்சுவேலி - அச்சு நகர்ப் பகுதியில் மக்கள் தாமாகவே முன்வந்து மாவீரர் தினத்தையொட்டி சேமக்காலையை சிரமதான அடிப்படையில் திருத்தியமைத்து வருகின்றமையும்குறிப்பிடத்தக்கது.

அச்சுவேலி கதிரொளி சனசமூக நிலையத்தினர் அப்பகுதியில் மரணித்த போராளி றஜீவனின் நினைவாக நூலகம் ஒன்றை நேற்றுத் திறந்து வைத்தனர். இந்நூலகத்துக்குப் பொதுமக்கள் பலர் பல நூல்களை அன்பளிப்புச்செய்தனர். (ப10, 53, 48, 32)

### புதிதாக ஓய்வூதியம் பெற்றோருக்கு

## மாற்று இளைப்பாற்றுக் கடிதம் செயலகம் வந்து சேரவில்லை

யாழ் மாவட்டத்தில் புதிதாக இளைப்பாறிய பலருக்கு மாற்று ஓய்வூதியக் கொடுப்பனவுக்கான கடிதங்கள் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் இதை வழங்குவதற்கான மூலப்பிரதியோன மற்றும் ஆவணங்களோ இன்னும் யாழ் செயலகத்திற்கு வந்து சேரவில்லை.

இதனால் பலர் தினசரி செயலகத்திற்குச் சென்று அலைந்து திரிவதைக் காணக் கூடியதாக உள்ளது. (66)

### ஜேர்மன் ..

இதுபற்றிய ஒரு மதிப்பீட்டு அறிக்கையை ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அனுப்பிவைக்குமாறு, இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ் பிரிவு கேட்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலிருந்து வழங்கப்பட்ட நவீன மருத்துவ உபகரணங்களில் சிலவற்றை யாழ் மாவட்டத்திற்குப் பெற்றுக்கொள்வதற்குமுயற்சி எடுக்கப்பட்டுள்ளது

இந்த உபகரணங்களை அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வழங்கியுள்ளது. (70)

### மாங்குளம்

கள் தெரியவரவில்லை.'

இதனிடையே முகாம்பகுதியில் விடுதலைப்புலிகள் நிலைகொண்டுள்ள இடங்களை நோக்கி பொம்மர்கள், ஹெலிகள், தாக்குதல் நடாத்தி வருகின்றன. (71)

### சேத ..

தமதுசொத்துக்கள்உடைமைகள் சேதத்திற்குள்ளானவர்கள் கிராம சேவை அலுவலர்களிடம்பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (36)

### கொட்டாஞ்சேனை ..

இதேவேளை மற்றுமோர் முஸ்லிம் கும்பல் வெளியே நின்ற ஐந்து கார்களை அடித்து நொருக்கியது. இச் சம்பவத்தில் ஐவர் கத்திக் குத்துக்கும் உள்ளாகினர்.

இச் சம்பவம் இந்தியாவில் தற்போது சர்ச்சைக்குரிய ஆயோத்தி - பாபர் மசூதி பிரச்சினையின் எதிரொலி என்று வியக்கியானம் செய்துள்ளது.

## காலமானார்

### திரு. நாகமுத்து சிவக்கொழுந்து

கரணவாய் வடக்கைச் சேர்ந்த திரு. நாகமுத்து சிவக்கொழுந்து, நிதி உதவியாளர் (Financial Assistant) ஓய்வூதியத் திணைக்களம், 23-11-1990-ல் காலமானார். இவர் இராசம்மாவின் அன்பு கணவரும், திரு சிறீஸ்கந்தராசா (பொறியியலாளர், நையீரியா). திரு, சிறி ஆனந்தராசா (பொறியியலாளர், (ஓமான்), திரு. சிறி த்மராசா (மதிப்பீட்டாளர்), கலாநிதி சிறிசற்குணராசா (யாழ் பல்கலைக் கழகம்), செல்வி ஜெயலட்சுமி, திரு. சிறிரங்கநாதன் (பொறியியல் பீடம் பேராதனை), திரு. கதிர்காமநாதன் (ஹாட்லி கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சி. இந்திராதேவி, திருமதி சி. மாலதி ஆகியோரின் அன்பு மாமனாரும, திருமதி திருநாமம் இரசம்மா, திருமதி சின்னத்துரை யோகம்மா, திரு. நா தியாகராசா (Inland Revenue, Tax Officer) ஆகியோரின் அன்பு சகோதரரும் ஆவார். இவரது ஈமக்கிரியை 24-11-90 காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக எள்ளம்குளம் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

கலாநிதி சி. சிறிசற்குணராசா'

கரணவாய் வடக்கு,
உடுப்பிட்டி,

11135